DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 8/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 8 Shabana** |
| Father's Name | அக்பர் அலி |
| Village | பாண்டிச்சேரி |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 24/10/2024

**முதல் விசாரணை**

சண்டை 12.09.2021ல் என் தம்பி பாருக் அடிப்பட்டதாகவும், முண்டியம்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிடி ஸ்கேன் எடுக்கும் வசதி இல்லாததால் மறுநாள் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டது. என் தம்பிக்கு தலையில் அடிப்பட்டு இருந்தது இடது கை மோதிர விரலில் காயம் இருந்தது. மேற்படி சங்கதியை போலிஸ் விசாரணையில் நான் தெரிவித்தேன்.

**குறுக்கு விசாரணை**

எனது கணவர் பெயர் அப்பாவு என்று சொன்னால் அது தவறு. 12.09.2021ல் என் தம்பியும், என் தந்தையும் என் வீட்டில் தங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். மறுநாள் காலை பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்று அழைத்தோம். நானும், என் தந்தையும் தான் என் தம்பியை மருத்துவமனையில் சேர்த்தோம். 13.09.2021 அன்று ஒருநாள் முழுவதும் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். 13.09.2021 அன்று இரவே அவர்கள் இருவரும் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள்.

சம்பவம் சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. கைப்பேசியில் தான் தகவல் தெரிவித்தார்கள். போலிசாரும் என்னை கைப்பேசியில் தான் விசாரணை செய்தார்கள். 14.09.2021ம் தேதி என்னை கைப்பேசி மூலமாக போலிசார் விசாரித்தனர். நீங்கள் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் தம்பிக்காக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல. நான் கூறுவது தான் உண்மை.